IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.4

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.வெங்கடேசன் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர், காட்பாடி |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.01.2026.

4ம் எதிரி நீதிமன்ற காவல். மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது கிராம நிர்வாக அலுவலராக காட்பாடியில் பணிபுரிகிறேன். நான் 2016ல் கழிஞ்சூரில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தபோது 02.10.2016 அன்று விருதம்பட்டு காவல் ஆய்வாளர் பாலாறு பாலம் அருகே 5 நபர்களை பிடித்து வைத்திருப்பதாகவும், அர்களது ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய சாட்சியாக போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் கிராம உதவியாளர் செல்வகுமாரும் பாலாறு பாலம் அருகே சென்றோம். நாங்கள் அங்கு போகும்போது 10 பேர் இருந்தார்கள். போலீசார் ராஜேஷ்குமாரை காண்பித்து இவர் தான் ராஜேஷ் குமார் என்று சொன்னார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் பதிவு செய்தார். ஆஜர் எதிரிகளை கடைசியாக இருப்பவர் தான் எதிரி ராஜேஷ் குமார் என சாட்சி கூறுகிறார். (சாட்சி எதிரி ராஜேஷ் குமாரை தவறாக காண்பித்து பின்னர் 1ம் எதிரியை சரியாக அடையாளம் காண்பித்தார்). பின்னர் 1ம் எதிரி சொல்லச்சொல்ல அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். பணம் ரூ.27,000/- மற்றும் கத்தியை, Pulsar Bike ஐ அங்கேயே எடுத்துக் கொடுத்தார்.

போலீசார் டைப் செய்து வைத்திருந்தார்கள் அதை படித்து பார்த்து அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3. இரண்டாவது கையெழுத்து என்னுடைய உதவியாளருடையது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

நாங்கள் அந்த வழியாக சென்றுக்கொண்டிருந்தபோது போலீசார் தொலைபேசி மூலம் வருமாறு கேட்டார்கள். எந்த போன் நம்பரிலிருந்து எனக்கு போன் வந்தது என்று எனக்கு நினைவில்லை. எந்த வழக்கிற்கு என்னை சாட்சியாக இருக்குமாறு வரச்சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. நேரில் நான் போனவுடன் போலீசார் கடத்தல் வழக்கிற்காக சாட்சியாக இருக்குமாறு கேட்டார்கள். நான் கையெழுத்து போட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை படித்து பார்த்தேன் என்றால் சரி. குற்ற எண் நினைவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்தை போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. என் முன்னிலையிலும் எந்த சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 21.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.21 19:41:36 +0600

Additional District Judge(FTC),
Vellore